செ.வெ.எண்:57 நாள்: 21.03.2019

**கரூர் மாவட்டம்**

**வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பணிஒதுக்கீடு கணினி முறையில் குலுக்கல் - தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் நடத்தினார்**

அதன் விபரம் வருமாறு:

நடைபெறவுள்ள மக்களவைபொதுத்தேர்தலில் கரூர் மாவட்டத்தில் உள்ள 1,031 வாக்குச்சாவடி மையங்களும், 6 துணை வாக்குச்சாவடி மையங்களும் என மொத்தம் 1,037 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்குச்சாவடி மையத்திலும், ஒரு வாக்குசாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மூன்று நபர்கள் நியமிக்கப்படுவார்கள். 1,400க்குமேல் வாக்காளர்கள் உள்ள வாக்குச்சாவடி மையங்களில கூடுதலாக ஒரு வாக்குச்சாவடி அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள். அதனடிப்படையில் மொத்தம் உள்ள 1,037 வாக்குச்சாவடி மையங்களிலும் பணிபுரிய 5,028 நபர்களுக்கு கணினி முறையில் குலுக்கல் செய்து பணி ஒதுக்கீடுசெய்யப்படுவதற்கான நிகழ்வு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் பிரிவில் இன்று நடைபெற்றது.

தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் கணினிமுறையில் குலுக்கலை நடத்தினார். அதனடிப்படையில் 5,028 நபர்களுக்கும் இன்று முதல் அவரக்ள் எந்த வாக்குச்சாவடி மையத்தில் பணிபுரிய வேண்டும் என்பதற்காக ஆணை வழங்கப்படவுள்ளது.

24.03.2019 ஞாயிற்றுக்கிழமையன்று பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு அந்ததந்த சட்டமன்றத்தொகுதிக்குபட்பட்ட பகுதிகளில் சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்களின் மூலம் முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளது.

அதனடிப்படையில் கரூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வெண்ணமலை சேரன் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியிலும், அரவக்குறிச்சி சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வள்ளுவர் மேலாண்மைக் கல்லூரியிலும், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு புலியூர் இராணி மெய்யம்மை மேல்நிலைப்பள்ளியிலும், குளித்தலை சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு குளித்தலை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி.செல்வசுரபி, தேர்தல் பிரிவு வட்டாட்சியர் திரு.சிவக்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.